தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் அ.தொட்டியப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவரின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திருமதி.ச.கருப்பாயி

அனுமதி எண் : 01/2023 நாள்:

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் ஊராட்சி - அ.தொட்டியப்பட்டி ஊராட்சி - அப்பக்கரை கிராம சர்வே எண்: 103/3B & 130/2B-ல் 1.36 ஏக்கர் (5500 ச.மீ) பரப்பளவு கொண்ட உத்தேச மனைபிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை :

1 மனுதாரர் திரு.தமிழ்மணி மற்றும் அஜய்கண்ணன் என்பவரின் மனு நாள்: 10.10.2023

2 அரசாணை எண்: 18.ந.நி (ம)கு.வ.(ந.ப.1)துறை நாள்: 04.02.2019

3 அரசாணை எண்: 16.ந.நி (ம)கு.வ.(ந.ப.1)துறை நாள்: 31.01.2020

4 நகர் ஊரமைப்பு சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367 2019 -பிஏ2, நாள்: 05.02.2020

5 அரசாணை எண்: 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020

6 அரசாணை நிலை எண்: 26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை (SGS) நாள்: 18.02.2015.

7 வேளாண் இணை இயக்குநர் மதுரை அவர்களது தடையில்லா சான்று எண்: தி4/12421/2022 நாள்: 12.09.2023

8 மதுரை உள்ளூர் குழும உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர்,(பொ) அவர்களின்Roc.எண்: 16448/2022/SWP/A76YJ69D/2023/TCP நாள் : 23/12/2023

9 மனுதாரர் திரு.தமிழ்மணி மற்றும் அஜய்கண்ணன் அவர்களிடமிருந்து உள்ளாட்சி தானமாக பெறப்பட்ட அசல் பத்திரம் 504/2024 நாள்: 12.02.2024 மற்றும் TANGEDCO, தானமாக பெறப்பட்ட அசல் பத்திரம் 504/2024 நாள்: 12.02.2024

10 அ.தொட்டியப்பட்டி ஊராட்சிக்கு 1 சதுரமீட்டருக்கு ரூ.25/- வீதம் 3587.31 ச.மீ க்கு செலுத்தப்படவேண்டிய தொகை. வளர்ச்சிக்கட்டணம் ரசீது எண் :2023-2024/20/12/38/7/10 நாள்: 14.03.2024 தொகை ரூ.41683 மற்றும் ரசீது எண் :2023-2024/20/12/38/7/11 தொகை ரூ.48000 நாள்: 14.03.2024 மூலம் செலுத்தப்பட்டுள்ளது

த.பி.பா

ச.கருப்பாயி
தலைவர்
ஊராட்சி மன்றம்
அ.தொட்டியப்பட்டி

உத்தரவு

மதுரை உள்ளூர் திட்ட குழும பகுதி, மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அ.தொட்டியப்பட்டி ஊராட்சி அப்பக்கரை கிராம சர்வே எண்: 103/3B & 130/2B-ல் 1.36 ஏக்கர் (5500 ச.மீ) பரப்பளவு நிலத்தை பார்வையில் காணும் அரசாணைகளின் படி, ஒப்புதளிக்கப்பட்ட மதுரை திட்டமிடப்படாத பகுதியிலிருந்து (Non Planing Area) வேளாண்மை துறை தடையில்லா சான்று பெறப்பட்டு குடியிருப்பு உபயோகப் பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி சர்வே எண்: 103/3B & 130/2B-ல் 1.36 ஏக்கர் (5500 ச.மீ) பரப்பளவு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ம.உ.தி.கு எண்: 87/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி 87/2023 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேற்படி உத்தேச குடியிருப்பு மனைபிரிவு வரைபடத்திற்கு பார்வைகளில் காணும் கடிதங்கள் மற்றும் அரசாணைகள் மற்றும் உத்தரவு அடிப்படையில் நிபந்தனைகளுடன் மனைப்பரிவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 9- ன்படி மனைபிரிவுகளில் அமைந்துள்ள மனைகளுக்கான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு பரப்பு 21.61 ச.மீ மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கு 25.15 ச.மீ தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.மேலும் மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகளுக்கான திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) பரப்பளவிற்கு ஈடான அரசு வழிக்காட்டு மதிப்பீட்டிற்குன்டான தொகை ரூ.17936/- உரிய அரசு தலைப்பில் 13.12.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

அ.தொட்டியப்பட்டி ஊராட்சிக்கு 1 சதுரமீட்டருக்கு ரூ.25/ - வீதம் 3587.31 ச.மீ ___ - க்கு செலுத்தப்படவேண்டிய வளர்ச்சிக்கட்டணம் ரசீது எண் : 2023-2024/20/12/38/7/10 நாள்: 14.03.2024 தொகை ரூ.41683 மற்றும் ரசீது எண் :2023-2024/20/12/38/7/11 தொகை ரூ.48000 நாள்: 14.03.2024 மூலம் செலுத்தப்பட்டுள்ளது

நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் - 2019- ல் மனைபிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்கும் பொருந்தும் எனவே பொருத்தமான அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்

2. மேற்படி மனைபிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் உள்ளாட்சி மற்றும் TANGEDCO விற்கு தான ஆவணம் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளதை மனைபிரிவு வரைபடம் மற்றும் தானப் பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய்த்துறை ஆவணங்களில் நில அளவை செய்து உள்ளாட்சி மற்றும் TANGEDCO பெயரில் உட்பிரிவு செய்து கொடுக்க வேண்டும்.

3. மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலையின் அமைப்புகள் அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் முன்னிட்டும் மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

த.பி.பா

4 நகர் ஊரமைப்புத்துறை கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாராரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறையோ ஊராட்சி ஒன்றியமோ, ஊராட்சியோ பொறுத்தமான அமைப்பு அல்ல.

5 சாலையில் இருபுறங்களிலும் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்

6 அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவில் உள்ள மனைகளுக்கு மட்டுமே பொருந்தும் மனைகளில் அமையும் கட்டிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படக்கூடாது.

7 மனைபிரிவின் ஊடே குறைந்த அழுத்த உயர் அழுத்த மின் கம்பிப் பாதை இருந்தால் சாலையின் ஓரமாக மாற்றி அமைக்க வேண்டும்

8 உள்ளாட்சி அமைப்புக்கு ச.மீ தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்ட இடத்தில் சுற்றி முள் வேலி அமைத்து உள்ளாட்சி அமைப்புக்கு ஒதுக்கப்பட்ட இடம் என தகவல் பலகை அமைக்க வேண்டும்

9 மனைபிரிவின் ஊடே நீர் பாசன வாய்க்கால் இருந்தால் எந்த விதமான ஆக்கிரமிப்போ மனையில் கட்டப்பட உள்ள வீடுகளின் கழிவுநீரோ விடக்கூடாது.

10 மேற்காணும் விதிமுறைகள் ஏதும் மீறப்பட்டிருந்தால் மனைபிரிவு வரைபடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி அ.தொட்டியப்பட்டி ஊராட்சி செயல் அலுவலர் அவரகளால் ரத்து செய்யப்படும

அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவின் ஒதுக்கீடு விபரம்

அ.தொட்டியப்பட்டி ஊராட்சி அப்பக்கரை கிராம சர்வே எண்: 103/3B & 130/2B-ல் 1.36 ஏக்கர் (5500 ச.மீ)

1	உத்தேச மனைபிரிவின் மொத்த பரப்பளவு	:	5500.00 ச.மீ
2	உத்தேச மனைபிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு	:	3587.31 ச.மீ
3	உள்ளாட்சி அமைப்புக்கான ஒதுக்கீடு	:	25.15 ச.மீ
4	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்ககான ஒதுக்கீடு (TANGEDCO)	:	21.61 ச.மீ
5	மொத்த மனைகளின் எண்ணிக்கை	:	33 மனைகள்

த.பி.பா

சுகுப்பாலி
உலைவா
ஊராட்சி மன்றம்
அ.தொட்டியப்பட்டி

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மதுரை உள்ளூர் திட்ட குழும பகுதி மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட அ.தொட்டியப்பட்டி ஊராட்சி அப்பக்கரை கிராம சர்வே எண்: 103/3B & 130/2B-ல் 1.36 ஏக்கர் (5500 ச.மீ) பரப்பளவு கொண்ட (1 முதல் 33) 33 எண்ணிக்கையிலான மனைகள் கொண்ட திட்ட அனுமதி வழங்கப்பட்ட குடியிருப்பு மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது

தலைவர் / செயல் அலுவலர்
அ.தொட்டியப்பட்டி ஊராட்சி
தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம்
பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்

தலைவர்
ஊராட்சி மன்றம்
அ.தொட்டியபட்டி

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடம் அசல்

பெறுநர்:

திரு.பி.தமிழ்மணி மற்றும் ஆர்.அஜய்கண்ணன்,
கதவு எண்: - 37/2B3, ராஜாஜி 2 வது தெரு,
திருமங்கலம் டவுண்,
மதுரை - 625706.

நகல்

1. உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்,
   மதுரை உள்ளூர் திட்ட குழுமம், மதுரை
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மதுரை.
3. சார்பதிவாளர் பதிவுத்துறை பேரையூர்,
4. The Executive Engineer /Cvil of the Concerned EDC TANGEDCO Madurai.